**Dienststelle Volksschulbildung** பாடசாலைக் கல்விச்சேவை

ஆரம்பப்பாடசாலை – மேற்பிரிவுப்பாடசாலை / நீண்டகால உயர்வகுப்பு வகுப்பேற்றம்

**கலந்துரையாடல் ஆயத்தப்படுத்தலுக்கான ஆவணம்**

6 ஆம் வகுப்பின் இறுதியில் மதிப்பீட்டுக்கலந்துரையாடலின் போது, வகுப்பாசிரியரும் பெற்றோராகிய நீங்களும் உங்கள் பிள்ளையும் உங்கள் பிள்ளையின் கல்விப்பயணம் பற்றிக் கலந்துரையாடுவீர்கள்.

பெற்றோராகிய நீங்கள், உங்கள் அறிவுக்கெட்டிய வரையில் உங்கள் பிள்ளையை அறிந்திருப்பீர்கள். உங்கள் பிள்ளையுடனும் அவரது ஆசிரியருடனுமான கலந்துரையாடலின் போது, உங்களது நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்கான ஓர் அடிப்படையாக கீழ்காணும் அவதானிப்புக்கள் அமையும். இந்த விபரங்கள் மேற்பிரிவுப்பாடசாலை 1க்குத் தேவையான நிபந்தனைகளுடன் தொடர்புடையதாக இருக்கும்.

| எமது பிள்ளை …………………………………………………………………………… | அனேகமாக ஆம் | அனேகமாக இல்லை |
|---|---|---|
| … தனது அன்றாட பாடசாலை நாளையும் கற்றலையும் வீட்டுப்பாடவேலைகளையும் எப்போதும் தானாகவே செய்வார். | ☐ | ☐ |
| … புதிய சூழ்நிலையைப் புரிந்து கொள்வார். | ☐ | ☐ |
| … நேரத்தைச் சரியாக பகிர்ந்து செய்வார். | ☐ | ☐ |
| … வேலைகளைக் கவனமாகவும் முழுமையாகவும் செய்து முடிப்பார். | ☐ | ☐ |
| ... விவாதங்களின் போது, தனது சொந்தக் கருத்துக்களை முன் வைப்பதுடன் அதற்கான காரணங்களையும் கூறுவார். | ☐ | ☐ |
| … இலகுவாகவும் விருப்புடனும் கற்கின்றார். | ☐ | ☐ |
| … அதிகம் கற்பதற்கு தயாராக உள்ளார். | ☐ | ☐ |
| … ஒரு வேலையில் நீண்ட நேரம் கிரகித்திருக்கக் கூடியவர். | ☐ | ☐ |
| … கற்கின்ற பாடத்தின் உள்ளடக்கத்தை உணர்ந்து கொள்வதுடன் கற்றதை நீண்ட காலத்தின் பின்பும் ஞாபகப்படுத்திக் கொள்வார். | ☐ | ☐ |
| … தனது சொந்தக் கருத்துக்களை ஆக்கபூர்வமாக உருவாக்குவதுடன் அவற்றில் ஒன்றிரண்டை நடைமுறைப்படுத்தவும் செய்வார். | ☐ | ☐ |
| … பன்முகப்பட்ட அறிவினை வளர்க்க, மிகுந்த ஆர்வமுடையவர். | ☐ | ☐ |
| … எதனையும் தாங்கும் சக்தி படைத்தவர். | ☐ | ☐ |
| … தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவதுடன் பிரச்சினையேற்படும் போது விரைவாக தைரியத்தையிழக்கமாட்டார். | ☐ | ☐ |
| … பாடசாலை தவிர மற்றைய நேரங்களில் ஒரு பொழுதுபோக்கை வைத்திருக்கின்றார் அல்லது அவருக்கு பொழுதைப்போக்கக் கூடிய வேறு வேலைகளுண்டு. | ☐ | ☐ |

**பெற்றோராகிய நாங்கள் இன்னும் மூன்று வருடங்களில் எமது பிள்ளையை ...**

- ☐ தொழிற்கல்வியை நோக்கி வழி நடாத்த விரும்புகின்றோம்.
- ☐ மேற்கொண்டு கற்கக் கூடிய பாடசாலையை நோக்கி வழி நடாத்த விரும்புகின்றோம்.
- ☐ உயர்தர வகுப்பில் உயர் தராதரப் பரீட்சையை (Matura) நோக்கி வழி நடாத்த விரும்புகின்றோம்.
- ☐ ........................................

**குறிப்புகள்**

லுட்சேர்ண், 14 ஆவணி 2017
124843